CRITERION III– - RESEARCH, INNOVATION AND EXTENSION

This is to certify that the following supportive documents have been verified and digitally signed by the Head of the Institution.

Criterion Number	3
Metric	3.1.2
Detail	**The Institution Provides seed money to its teachers for research**
Pages	1 to 61

Dr. R. RADHA
Principal i/c
SHRIMATHI DEVKUNVAR NANALAL BHATT VAISHNAV COLLEGE FOR WOMEN (AUTONOMOUS) CHROMEPET, CHENNAI-44

RADHA
2024-02-10
18:01+05:30

SHRIMATHI DEVKUNVAR NANALAL BHATT VAISHNAV COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)
(Affiliated to the University of Madras and Accredited with 'A+' Grade by NAAC)
Chromepet, Chennai - 600 044.

RESEARCH CELL

P.I.No. 2019/MRP/001 06/12/2019

SANCTION LETTER

To
Dr. S. Lakshmi,
Assistant Professor of Tamil,
S.D.N.B. Vaishnav College for Women,
Chennai-600 044.

Dr. K. Padma Vilasini,
Assistant Professor of Tamil,
S.D.N.B. Vaishnav College for Women,
Chennai-600 044.

This has reference to the Minor Research Project titled **"Tholkappiya uvamaiyiyalum AdanValarchi PadiNilaigalum"** submitted by you for the financial support. In this regard we are glad to inform you that the Management has sanctioned the seed money of **Rs. 65,000/-** for the project from December 2019 to December 2020.

Project Id: **19TPRE001**

M. Mahadevi
DEAN RESEARCH

Dean - Research
Shrimathi Devkunvar Nanalal Bhatt
Vaishnav College for Women (Autonomous)
Chromepet, Chennai-600 044.

S.D.N.B. VAISHNAV COLLEGE FOR WOMEN
Autonomous
Chromepet,
Chennai-44.

R. Geetha
PRINCIPAL

Day College Office: 2265 5450, Evening College Office: 2265 4976, Fax: 2265 4976
E-mail: query@sdnbvc.edu.in, Website: www.sdnbvc.edu.in

உவம உருபுகளும் அதன் வளர்ச்சிப் படிநிலைகளும்ஆராய்ச்சி திட்டம்

(Minor Research Project)

முனைவர் சு லட்சுமி

முனைவர் கோ.பத்மவிலாசினி

தமிழ்த் துறை (சுயநிதிப் பிரிவு)

ஸ்ரீமதி தேவ் குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி,

குரோம்பேட்டை,சென்னை-44.

உவம உருபுகளும் அதன் வளர்ச்சிப் படிநிலைகளும்

முன்னுரை

தமிழ் மொழியில் மிகத் தொன்மையான, முழுமையாகக் கிடைக்கப் பெற்றதுமான இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூவிலக்கணங்களைப் பற்றி மிகத் தெளிவாக நமக்கு உரைக்கின்றது. செய்யுளின் கட்டமைப்பிற்கு அடிப்படையாக அமையும் எழுத்து, சொல், பொருள், யாப்பு இலக்கணங்கள் நேர்முகமாக அமைய அணி இலக்கணம் மட்டும் செய்யுளுக்கு மெருகேற்றும் விதமாக மறைமுகமாக நிற்கின்றது. இங்கு தொல்காப்பியர் உவமை என்ற ஒன்றைப் பற்றி மட்டுமே கூறியுள்ளார். உவமையையும் பொருளையும் இணைக்க கூடிய சொற்களான

உவம உருபுகள் தொல்காப்பியர் காலத்திலேயே வரையறை செய்யப்பட்டிருந்தாலும் காலமாற்றத்தால் உவம உருபுகள் பல மறைந்தும் மாறியும் வந்துள்ளன. ஆனால் இன்று 'போல' என்னும் பொருள் படும் வகையில் பல உவம உருபுகள் தோற்றம் பெற்று, இலக்கிய உலகில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய உவம உருபு இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஆய்வின் தலைப்பு

'உவம உருபுகளும் அதன் வளர்ச்சிப் படி நிலைகளும்' என்று இந்த ஆய்வுக்குத் தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஆய்வின் நோக்கம்

பன்னெடுங்காலம் பழமை வாய்ந்த தமிழ் மொழியின் இலக்கண இலக்கிய வளங்கள் தொன்றுதொட்டு வளர்ந்து வருமாற்றை விளக்க தமிழ் துறையில் ஏராளமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவ்வகையில் காலப் பழமை கொண்ட தமிழின் முழுமையான முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில், ஒரு இயலில் கூறப்பட்டுள்ள உவமையின் இலக்கணக் கூறாகிய உவம உருபுகள் எவ்வாறு காலந்தோறும் மாற்றப்பட்டு புதிய வளர்ச்சிகள் பல பெற்று தற்காலத்தில் வழங்கி வருகிறது என்பதைக் காணுதலே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வின் இன்றியமையாமை

தொல்காப்பிய உவம இயலோடு இலக்கியங்களில் வரும் உவமைகள் நெருங்கிய தொடர்பைப் பெற்றுள்ளன. மற்றும் இவ் அடிப்படைகளே பிற்கால அணி நூல்களுக்கு முன்மாதிரியாக விளங்கியுள்ளதையும் பார்க்க முடிகிறது. சங்க செய்யுள்களில் உள்ளுறை இறைச்சிகளுக்கு விளக்கம் காணும் உரையாசிரியர்கள் தொல்காப்பிய சூத்திர நெறி வகைகளையே கொண்டு விளக்கம் தருகின்றனர். எனவே இலக்கியங்களில் வரும் உவமையினைத் தொல்காப்பியமும் ஏனைய அணி நூல்களும் காட்டும் அணியல் அடிப்படையில் நோக்குவது இந்த ஆய்வின் இன்றியமையாமை ஆகும்.

ஆய்வின் அணுகுமுறை

ஆய்வுத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக துறைதோறும் பல்வேறு அணுகுமுறைகள் புகுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வு சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரையிலான உவம உருபுகளைப் பகுத்தும் விளக்கியும் ஆய்வதால் இது பகுப்பாய்வாகவும் விளக்கமுறை ஆய்வாகவும் விளங்குகிறது.

ஆய்வின் ஆதாரங்கள்

ஆய்வுக்கு அடிப்படையான ஆய்வுக்குரிய தகவல்களும் அவை பற்றி விரிவாக அறிய எவையெல்லாம் பயன்படுகின்றனவோ அவை அனைத்தும் ஆதாரங்களாக கொள்ளப்படுகின்றன. அவை முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என இரு வகைப்படுத்தப்படுகின்றன.

முதன்மை ஆதாரங்கள்

இந்த ஆய்வுக்கு தொல்காப்பியம் முதன்மை ஆதாரமாக விளங்குகிறது.

துணைமை ஆதாரங்கள்

அணி இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள்,பக்தி இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்களான கவிதைகள் முதலான இதர படைப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சுருக்க குறியீடுகளின் ஆளுமை

தமிழ் நூல்களைக் குறித்த சுருக்கக் குறியீடுகளைக் கையாளுகின்ற நிலையில் தமிழ் சுருக்கக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு எல்லை

தொல்காப்பிய உவமையியல் அதன் அடிப்படையில் விரிவாக தோன்றிய உவம உருபுகள் பற்றிய இலக்கண நூல்கள், மற்றும் இக்கால முதல் தற்கால வரையிலான இலக்கியங்களில் காணப்படும் உவம உருபுகளையும் அதன் பயன்பாடுகளையும் கொண்டு ஆய்வினுடைய எல்லை அமைந்துள்ளது.

ஆய்வின் பாகுபாடு

முன்னுரை முடிவுரை நீங்கலாக இந்த ஆய்வானது மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

உவம உருபுகள் என்ற முதலியலில் உவம உருபுகளுடைய தோற்றம், அதனுடைய பயன்பாடுகள் ஒவ்வொரு அணி நூல்களிலும் உவம உருபு என்னும் சொல் எவ்வாறு வழங்கப்படுகிறது, என்பதும், எத்தனை உவம உருபுகள் அமைந்துள்ளன என்பது முதல் இயலில் விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இயலில் சங்க கால முதல் இடைக்கால வரையிலான உவம உருபுகள் எடுத்துக்காட்டுடன் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. சங்ககாலம், காப்பிய காலம், பக்தி இலக்கிய காலம் அதனுடைய தொடர்ச்சியாக இக்கால இலக்கியம் வரையிலான இலக்கியங்களில் பயின்று வர கூடிய உவம உருபுகளுக்கு எடுத்துக்காட்டுகள் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது இயலில் தற்கால உவம உருபுகள் எவ்வாறு பயன்பெற்று வருகின்றன என்பதையும் உவம உருபுகள் எவ்வாறு மாற்றம் பெற்று பயன்பாட்டில் உள்ளன என்பது போன்றவை விளக்கப்பட்டுள்ளது.

பின்னிணைப்பு ஒன்றில் ஆய்வாளர்கள் எழுதிய இரண்டு கட்டுரைகள் கொடுக்கப்பட்டுள்ளது. பின்னிணைப்பு இரண்டில் பயனர் நோக்கில் உவம உருபுகள் என்று ஆய்வாளர்களால் நடத்தப்பட்ட பயிலரங்கத்தினுடைய அழைப்பிதழ் ஆசிரியர்களுடைய உரைகள் மற்றும் மாணவர்கள் எழுதிய கேள்வி பதில்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளது.

இயல் 1

காலந்தோறும் உவம உருபுகள்

முன்னுரை

தமிழில் முதன்முதலில் முழுமையாகக் கிடைத்த இலக்கண நூலான தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் என்ற மூவிலக்கணம் பற்றிக் கூறுகின்றது. தொல்காப்பியர் யாப்பு, அணி பற்றித் தனியே எதுவும் கூறாது தேவையான இடங்களில் இவ்விரண்டு வகை இலக்கணங்கள் குறித்தும் மேற்கூறிய மூவிலக்கணத்திற்குள்ளேயே அடக்கியுள்ளார். அவ்வாறு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நூலாம் தொல்காப்பியத்தில் உவம உருபுகள் பற்றி தொல்காப்பியர் தெளிவாக கூறியுள்ளார்.

உவமையின் தோற்றமும் வளர்ச்சியும்

இயற்கை அழகில் மனதைப் பறிகொடுத்த மனிதன் கவிதை அழகிலும் தன் மனதைப் பறி கொடுக்கின்றான். கவிதைக்கு அணி நயம் இன்றியமையாதது. அதிலும் உவமையின் நயமே உயர்ந்தது. அணிகளின்

தாய் உவமையணி என்பர். கவிஞர்கள் காட்டும் உவமைகள் மனிதன் மனதில் ஆழப்பதிந்து அவனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

காணும் பொருட்களைப் பிறவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் இயல்பு மனிதனிடம் இயல்பாகவே அமைந்துள்ளது. மனிதன் எப்பொழுது இந்த எண்ணம் தோன்றியதோ அன்றே மொழியும் தோன்றியிருக்கக்கூடும். எனவே உவமை என்று தோன்றியது என்று ஆராய்வதைக் காட்டிலும் அதன் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே இங்கு இன்றியமையாததாகிறது.

மொழி தோன்றிய காலத்திலிருந்தே ஒன்றை விளக்க அதனையொத்த பிறிதொன்றின் மூலமாக விளக்குதல் என்பது இருந்து வருகிறது. முற்காலத்தில் மனிதன் பேசும் பேச்சிலும் செய்யுளிலும் உவமையைக் கையாண்டுள்ளான்.

அதில் போல, புரைய போன்ற உவமை உருபுகள் இயல்பாகவே ஏற்பட்டது. அதேநேரம் இன்னின்ன ஒப்புமைப் பண்புக்கு இந்த உவமைகள் தான் வரவேண்டும் என்ற வரையறைப் பண்பும் இருந்தது. தொல்காப்பியர் இவற்றை விரிவாக உவமவியலில் கூறுகின்றார். அவர் உவமையியலில் உவமையின் பாகுபாட்டைக் கூறினாரே தவிர உவமை அணி என்று எங்குமே கூறவில்லை.

தொல்காப்பியரின் உவமையியல் அணியிலக்கணம் கூற புகுந்ததன்று. எனினும் உவமையியலில் உவமைக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்திருக்கிறார். பிற்காலத்தில் தோன்றிய எல்லா அணி வகைகளையும் தொல்காப்பியரின் உவமவியலில் அடக்கிவிட முடியும். அகத்திணையியலில் ஏனையவற்றை வெளிப்படை உவமம், உள்ளுறை உவமம் என்று

கூறியுள்ளார். காலப்போக்கில் உவமை ஒன்றே பல கிளைகளாக விரிவடைந்துள்ளது.

ஐவகை இலக்கண வளர்ச்சி

தொல்காப்பியர் காலத்தில் மூவகை இலக்கணமாய் இருந்த இலக்கண மரபு பின்னர் நால்வகையாகி அதன் பின்னர் ஐவகை இலக்கணமாக மாறிற்று.

இவ்வகையில் முதன் முதலில் ஐந்திலக்கணம் எனப் புதிய மரபு கூறிய நூல் 'வீரசோழியம்' ஆகும். இது பதினோராம் நூற்றாண்டில் புத்தமித்திரர் என்பவரால் இயற்றப்பட்டது. இதன் பின்னர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் சமண முனிவராகிய பவணந்தி முனிவரால் 'நன்னூல்' என்ற இலக்கண நூல் எழுதப்பட்டது. ஐந்திலக்கணமும் நன்னூலில் கூறப்பட்டிருக்கலாம் என்று கருதினாலும் எழுத்தும், சொல்லும் ஒழிந்த ஏனையன காலத்தின் மாறுபாட்டால் நம் கைக்குக் கிடைக்கவில்லை.

ஐந்திலக்கண நூல்களுள் ஒன்றான 'தமிழ் நெறி விளக்கம்' என்னும் நூலின் முன்னுரை மற்றும் அதன் சிறப்புப் பாயிரப் பகுதிகளின் வழியே ஐந்திலக்கணப் பாகுபாடு இருந்ததை நாம் உணர முடிகிறது. இந்நூலின் இருபத்தைந்து அகப்பொருள் பற்றிய பாடல்களைத் தவிர ஏனையவை தற்போது கிடைக்கப் பெறவில்லை.

திருவாரூர் வைத்யநாத தேசிகரின் 'ஐந்திலக்கண நூல்' பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதில் அணிகள் பற்றிய செய்திகள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. இது வடமொழியின் 'காவிய தர்சத்தில்' கூறியுள்ள அணி இலக்கணத்தோடு தமிழ் மரபையும் மனதிலிருத்தி எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமா முனிவரால் எழுதப்பட்ட ஐந்திலக்கண நூல் 'தொன்னூல் விளக்கம்' என்பதாகும். அணி இலக்கணம் பற்றிய செய்திகள் இந்நூலில் அறுபத்தொன்பது நூற்பாக்களில் விளக்கப்பட்டுள்ளன. இது 'குட்டித் தொல்காப்பியம்' என்றும் அழைக்கப்படுகிறது.

முத்துவீர உபாத்யாயரின் 'முத்து வீரியம்', சாமி கவிராசரின் 'சாமிநாதம்' என்பனவும் ஐந்திலக்கணம் கூறும் நூல்களாகும். **“பிற்காலத்தில் எழுந்த எல்லா வகை அணிகளையும் நாம் தொல்காப்பியத்துள் அடக்கிக் கூறலாம்"** என்று திறனாய்வு நோக்கில் கருத்துகள் கூறப்படுவதை இன்று நோக்க முடிகிறது.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்,
வழுவல கால வகையினானே" என்பதற்கேற்ப இன்று புதிய புதிய பல அணி இலக்கண நூல்கள் தோற்றம் பெறுவதைப் பார்க்கமுடிகின்றது.

உவமைச் சொல் - வரலாறு

காப்பியக் உலகில் பெரும் பங்கு வகிக்கும் உவமை, உவமம் என்ற சொற்கள் எப்படி வந்திருக்கலாம் என்று பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர். வடமொழியாளர்கள் உவமை என்ற சொல் உபமா என்று சொல்லியிருந்தான் பிறந்ததாகக் கூறுகின்றனர். பேரகராதி உபமா என்பதற்கு உவமை, உவமம் என்ற பொருளைத் தருகிறது. அகர முதலி உவமை என்ற சொல்லிற்கு ஒப்பு, உவமம்,உவம அலங்காரம், ஒன்றோடொன்று ஒப்பிடுதல், ஒன்றோடொன்று ஒப்பிருக்கை என பல பொருட்களைத் தருகின்றன. ஒப்பு என்பதுடன் மை விகுதி இணைத்தால்

ஒப்புமை – உபமை - உவமை என்று ஆகியது. இது தமிழ்ச்சொல் என்று கோ.ராகவன் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

உலக வழக்காயினும் செய்யுள் வழக்காயினும் புலவர்கள் உவமையைத் தான் அதிகம் கையாண்டுள்ளனர். அறிந்த ஒன்றைக் கொண்டு அறியாத ஒன்றை விளக்குதல் உரையாசிரியர்கள் மத்தியில் அதிகம் பார்க்க இயலுகிறது. "உவமை அலங்காரமே அலங்கார சாந்தத்தின் பிராணன்" என்கின்றான் பாரதி. எல்லா அலங்காரங்களும் உவமையணியின் விரியைத் தவிர வேறொன்றுமில்லை.

உவம உருபின் வேறு பெயர்கள்

உவம உருபுகள் என்னும் சொல் வழக்கு, பிற்கால அணி நூலார்களால் பல்வேறு பெயர்களில் கையாளப்படுகிறது.

- நன்னூலார் உவம உருபை ஒப்புருபு, உவம உருபு, உவமத்து உருபு என்கின்றார்.

- முத்துவீரியம் உவமஉருபு, ஒப்புருபுகள் ஆகிய சொற்களைப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

- தண்டியலங்காரம் உவமைச்சொல் என்கிறது.
- குவலயானந்தம் 2 என்ற நூலில் அப்பய்ய தீட்சிதர் 'உவமையின் வசனம்' கூறுகிறார்.
- மாறன் அலங்காரம் 'உவம உருபு' என்ற பெயரில் வழங்குகிறது.
- செந்தமிழ் இலக்கணம் என்னும் பிற்கால இலக்கண நூல் 'உவமத்து உருபு' என்றும் கூறுகின்றது.

சான்றாக,

குவலயானந்தம்,

" அன்ன அனைய ஆன போல

என்ன நிகர என ஒத்த ஒப்ப

என வரும் இவை பல உவமையின் வசனம்"

என்று உவமையை '**உவமையின் வசனம்'** என்றும்

மாறன் அலங்காரம்'

"பொதுவினுஞ் சிறப்பினும்புணர்ந்துளவாகி

யிது வழக்கிது செய்யுளெனுமீரிடத்தும்

வெளிப்படை குறிப்பென விழுமிய நெறியாற்

கொளப்படு முவமவுருபினைக் கூறி

னன்னபோல் வனையமான

வென்னநேர விறப்ப நிகர்ப்ப

நாட நளிய நடுங்கநந்த

வோடவொன்ற வொடுங்க வொட்டக்

கள்ளக்கருதக் காட்டக் கடுப்ப

வெள்ளவிழைய வெதிர வேய்ப்ப

மருளமலைய மாற மதிப்ப

வென்ற வந்த வேர வேய

வாங்கவொப்பவமரவியையப்

புல்லவுறழப் புரையப் பொருவ

வனை துணை கெழுவீற்தழை செத்தற்றணி

யென்றிவை நாற்பானெட்டும்பிறவு

மொன்றியதிறத்தாலொழுகுதலுளவே."

என்று உவமையை '**உவமவுருபு**' என்றும்,

தண்டியலங்காரம்,

"போல, மான, புரைய, பொருவ,

நேரக், கடுப்ப, நிகர, நிகர்ப்ப,

ஏர, வேய, மலைய, இயைய,

ஒப்ப, எள்ள, உறழ, ஏற்ப,

அன்ன, அனைய, அமர, அங்க,

என்ன, இகல, விழைய, எதிர,

துணை, தூக் காண்டாங்கு, மிகு, தகை, வீழ,

இணை, சிவன், கேழ், அற்றுச், செத்தோடு, பிறவும்

நவை தீர் பான்மை, உவமைச் சொல்லே."

என்று உவமையை '**உவமைச் சொற்கள்'** என்றும்

இலக்கண விளக்கம் என்னும் நூலில்

"போல மறுப்ப ஒப்பக் காய்ப்ப

நேர வியப்ப நளிய நந்த.

கடுப்ப ஏய்ப்ப மருள புரைய

ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப

அன்ன ஆங்கு மான விறப்ப

என்ன உறழத் தகைய நோக்க,

எள்ள விழையப் புல்லப் பொருவக்

கள்ள மதிப்ப வெல்ல வீழ, என்று

ஈரெட்டும் எட்டும் இருநான்கு முறையே

தத்தம் மரபின் சாற்றும் மூன்று உவமைக்கும்

ஒத்த உருபாம், உரைத்தமுத் திறத்தினும்

ஒன்ற நடுங்க ஏர ஏற்ப

வென்ற நாட மாற்றப் பொற்ப

ஆர அமர அனைய அவற்றோடு

எதிர ஏய இயைய இகலத்

துணைப்ப மலையத் தூக்கே செத்தோடு
கெழுதேர் நகைமிகு சிவண்நிகர் இன்னவும்,
இன்னா பிறவும், எய்துதல் உரிய."

என்று உவமையினை '**உவமையுருபுகள்**' என்றும்
இவ்வாறு வெவ்வேறு பெயர்களைக் கொண்டு காலந்தோறும் உவம உருபு வழங்கிவருகின்றது.

தொல்காப்பியர் காலத்திற்குப் பின் ஏராளமான இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றிலெல்லாம் உவமையையும் உவம உருபுகளையும் பற்றி பல்வேறு செய்திகள் கூறப்பட்டுள்ளன. கி.பி 10-ஆம் நூற்றாண்டில் தோன்றிய யாப்பெருங்கல விருத்தி, கிபி 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நேமிநாதம், வெண்பாப் பாட்டியல், கிபி 13 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூல், கிபி 16-ஆம் தோன்றிய நூற்றாண்டில் மாறனலங்காரம், தண்டியலங்காரம் கிபி 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் கிபி -19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சுவாமிநாதம், முத்துவீரியம், குவலயானந்தம் 1,2 போன்ற நூல்கள் தோன்றி புகழ் பெற்றன. இவையெல்லாம் உவமம், உவம உருபுகள் குறித்து ஆராய எழுந்த நூல்களாகும்.

தற்கால ஐந்திலக்கண நூல்கள்

காலந்தோறும் வளர்ந்துவரும் இலக்கியங்களுக்கேற்ப இலக்கண நூல்களும் தோன்றிக் கொண்டேதான் இருக்கின்றன. 'இலக்கண விளக்கம்' என்னும் பெயரில் கலாநிலையம் இராஜகோபாலாச்சாரி அவர்கள் ஐந்திலக்கண நூல் ஒன்றை எழுதியுள்ளார்.
'அறுவகை இலக்கணம்' என்னும் பெயரில் வண்ணச் சரபம்தண்டபாணிசுவாமிகள் எழுதியுள்ள அணி இலக்கண நூலினுள்

ஐந்திலக்கணத்தோடு ஆறாவது இலக்கணமாய்ப் புலமை இலக்கணமும் கூறப்பட்டுள்ளது.

உவமையியல் என்று தொல்காப்பியத்தில் ஓரியலில் கூறப்பட்ட அணிகள், பிற்காலத்தில் பல மாற்றங்களுக்கு உட்பட்டு வளர்ச்சி பெற்றுள்ளது. உவமையணி என்ற ஒன்றே மக்களின் கலை வளர்ச்சிகேற்பப் பல்வேறாகக் கிளைத்தது என்பதைத் தம் உரையில்,

"இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட்
சிலவற்றையும், சொல்லதிகாரத்தினுள்ளும்,
செய்யுளியலினுள்ளுஞ் சொல்லுகின்ற சில
பொருட்களையும் வாங்கிக் கொண்டு
மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென
இக்காலத்தாசிரியர் நூல்செய்தாரு முளர்"

என்று உவமை என்ற ஒன்று பின்னர் பலவாக மாறிக் கிளைத்தது என்று கூறியுள்ளார். இவ்வாறு பிற்காலத்தில் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்களும், ஏனைய நூலாசிரியர்களும் அணிகளின் சுவை உணர்ந்து அணிகளுக்கென்று தனித்தனியே இயல்கள் வகுத்தும், தனி நூல்கள் எழுதியும் அணியிலக்கணத்தை வளர்த்தனர். இத்தகைய அணி இலக்கணம் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்த, தொல்காப்பியர் சுட்டும் உவம உருபுகளாவன,

"அவைதாம்,
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை எனாஅ

எள்ள விழைய விறப்ப நிகர்ப்பக்

கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅக்

காய்ப்ப மதிப்பத் தகைய மருள

மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்

புல்லப் பொருவப் பொற்பப் போல

வெல்ல வீழ ஆங்கவை எனாஅ

நாட நளிய நடுங்க நந்த

ஓடப் புரைய என்றவை எனாஅ

ஆறு ஆறு அவையும் அன்னவை பிறவும்

கூறும் காலைப் பல்குறிப் பினவே."

என்றுரைக்கின்றார்.

தண்டியலங்காரம் கூறும் உவம உருபுகள்

பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கான தண்டியலங்காரத்தில் பொருளொடு பொருளை உவமிக்குமிடத்துத் தனித்தனியே இருக்கும் உவமானம் உவமேயம் என்ற இரண்டையும் இணைக்கும் வகையில் அமைவன உவம உருபுகள் என்றும் இவ்வுவம உருபுச் சொற்களாக முப்பத்தைந்தினைத் தண்டியாசிரியர் குறிப்பிடுகிறார். அவைகளாவன,

"போல மானப் புரையப் பொருவ

நேரக் கடுப்ப நிகர நிகர்ப்ப

ஏற ஏய மலைய இயைய

ஒப்ப என்ன உறழ ஏற்ப

அன்ன அனைய அமர வாங்க

என்ன இகல இழைய எதிரத்

துணை தூக்கு ஆண்டு ஆங்கு மிகுதகைவீழ
இணை சிவன் கேழ் அற்றுச் செத்தொடு பிறவும்
நவைதீர் பான்மை உவமைச் சொல்லே"
என்கிறார்.

தொல்காப்பியம் சுட்டும் பல்வேறு வகை உவமங்கள்

தொல்காப்பியர் கூறும் **'சுட்டிக்கூறா உவமம்'** என்ற வகைமையுள் தண்டியாசிரியர் கூறும் பல்வேறு வகை உவமைகளை அடக்கலாம். சான்றாக, பொருள் ஒருகால் உவமையாகவும், உவமை ஒருகால் பொருளாகவும் அமையும் இதர விதாரம் என்னும் உவமையைத் தடுமாறுவமமாகக் கொள்ளலாம். உவமையினைப் பொருளாக்கி, பொருளினை உவமையாக்கி வரும் விபரீத உவமை என்பது, தொல்காப்பியரின்,

"பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருவறு சிறப்பின் அஃது உவமமாகும்"

என்ற நூற்பாவிற்குப் பொருத்தமுடைத்தாய் உள்ளது.
தொல்காப்பியர் கூறும்,
"அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே"
என்பது மாலையுவமை என்ற அணிக்குப் பொருந்தும்.

தொல்காப்பியர், ஏனையுவமம் உள்ளுறையுவமம் என உவமைகளை இரு வகைப்படுத்துகிறார். இவ்வாறாகத் தொல்காப்பியர் சுட்டிய உவமவியல் கருத்துகளைக் கொண்டு உரையாசிரியர்கள் உவமையினை விரிக்குங்கால் அதனைத் தொடர்ந்து வேறு அணிகள் தோற்றம்

பெறுகின்றன. உவமை அணியோடு தொடர்புடையதான அதனை ஒட்டிப்பிறந்ததான புதிய பல அணிகள் தோற்றம் பெறுகின்றன. தனித்து மட்டுமின்றி வேறு பல அணிகளோடு இணைந்தும் வருகின்றன.

உவம உருபுகளின் வளர்ச்சி

அணிகள் பல்கிப் பெருகியதன் காரணமாக, குறிப்பாக உவமையணி தொடர்பான அணிகள் பல்கிப் பெருகியதன் காரணமாக உவம உருபுகளும் வளர்ச்சி பெறத் தொடங்கின. உவம உருபுகளின் பயன்பாடு ஒரு வரையறைக்கு உட்பட்டதாக அமைக்கப்பட்டிருந்தன. தொல்காப்பியர் வினை, பயன் மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் தோன்றக்கூடிய உவம உருபுகளைப் பட்டியலிடுகிறார். இதனையே தண்டியலங்காரர்,
"பண்பு தொழில் பயன் என்றிவற்றின் ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை" என்று வகைப்படுத்துகிறார். தொல்காப்பியர் 36 உவம உருபுகளைச் சுட்டி நிற்க, தண்டியலங்காரர் 35 வகையான உவம உருபுகளைச் சுட்டியுள்ளார். இவ்வாறாக உவம உருபுகளின் தோற்றம் என்பது தொல்காப்பியக் காலந்தொட்டுத் தொடர்ந்து பல்வேறு விதமான மாறுபாடுகளைக் கொண்டு இலங்குகின்றது.
அத்தகைய உவம உருபுகளின் வளர்ச்சி நிலையை இயல் இரண்டில் காணலாம்.

இயல் - 2

சங்ககால இலக்கியம் தொடங்கி இடைக்கால இலக்கியங்கள் வரையிலான உவம உருபுகள்

பண்டையத் தமிழரின் வாழ்வியல் கருவூலங்களாகத் திகழும் சங்க இலக்கியங்கள் தமிழின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றி நிற்கின்றன. சொற்சுவையும் பொருளாழமும் கொண்ட இப்பாடல்களுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் அவற்றில் அணிகள் அமையப் பெற்று அவற்றிற்கு இனிமை சேர்க்கின்றன. அழகான ஒரு பெண்ணிற்கு அணிமணிகள் பூட்டி மேலும் அழகாக்கிக் காண்பதைப் போல அருமையான சங்கப் பாடல்களில் அணிகள் பல இடம் பெற்று மென்மேலும் சிறப்புச் சேர்க்கின்றன. அணிகளுக்கெல்லாம் தாயணி என்று வழங்கக்கூடிய உவமை அணியில் பொருள் புலப்பாட்டு நெறிக்குக் காரணமாய் உள்ள பொருளை உவமானம் என்றும் உவமிக்க எடுத்துக்கொள்ளும் பொருளை உவமேயம் என்றும் இவ்விரண்டிற்கும் இடையில் நிற்கும் சொல்லை உவம உருபு என்றும் வழங்குதல் மரபு.

உவம உருபுகள் என்பன உவமையையும் பொருளையும் இணைக்கும் இடைச் சொற்கள் ஆகும். அவை முழுமை பெற்றச் சொற்களாகவும் தனி உருபுகளாகவும் விளங்கின. உவமையணியை பயன்படுத்தும் சொற்றொடர்களின் முழுமைத் தன்மைக்குக் காரணமாய் அமைந்து நிற்கும் இவ் உவம உருபுகளின் எண்ணிக்கைப் பற்றி தொல்காப்பியம் உள்ளிட்ட ஏனைய பிற நூல்களின் கருத்துகளையும் முதல் இயலில் விரிவாகக் கண்டோம்.

சிறப்புத் தன்மை கொண்டு விளங்கும் இவ்உவம உருபுகள் சங்கத்தமிழ் இலக்கியங்கள் முதல் இடைக்கால இலக்கியங்கள் வரை பயின்று வந்துள்ளமை குறித்து இவ்வியலில் சுட்டப்பட உள்ளது.

சங்க இலக்கியங்களில் உவமைகள்

பொருள் புலப்பாட்டு நெறிக்குக் காரணமானதாகவும், அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கக் கூடியதுமான உவமை அணிகள், யாவரும் அறிந்த ஒரு பொருளைச் சான்று காட்டி அறியாத பொருளை உணரவைக்கும். இவ் உவமை அணியின் ஒரு கூறாக விளங்கும் உவம உருபுகள் சங்க இலக்கியத்தில் சூழலுக்கும் காலத்திற்கு ஏற்றவாறு பல்வேறு வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. உவம உருபுகள் பல்வேறாக இருப்பினும் அவை யாவும் ஒரே அளவில் பயன்பாட்டில் இருந்துள்ளன என்று கூறுவதற்கில்லை. ஒரு சில உருபுகள் மிகுதியாகவும் ஒரு சில உருபுகள் அருகியும் பயின்று வந்துள்ளன. ஒரு சில உருபுகள் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் அறிய முடிகிறது.

"தொல்காப்பியர் கால உவம உருபுகளில் நந்த, நளிய என்பனவற்றிற்கு சங்க இலக்கியத்தில் சான்றுகள் காணப்படவில்லை"என்பதை அறிய முடிகிறது.

சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட உவம உருபுகளுள் அவற்றின் வடிவங்களுக்கும் மாறுபட்ட நிலையில் காணப்படுகின்றன. சங்க காலத்தில் இறப்ப, ஒன்ற, ஒடுங்க, ஓட, ஓட்ட, கள்ள, நடுங்க, நந்த, நளிய, நாட, புல்ல, மதிப்ப, மறுப்ப, வியப்ப என்ற உருபுகள் வலுவிழந்துவிட்டன என்கிறார் ரா. ஸ்ரீனிவாசன்.மேலும் அவர் இந்த இருபத்தி நான்கு உருபுகளும் அவற்றின் வடிவங்களும் திரிந்து சங்கநூல்களில் பயின்று வருகின்றன என்றும்,

உரையாசிரியரும் பேராசிரியரும் நந்த, நளிய என்ற உருபுகளுக்கு எடுத்துக்காட்டுகள் அவர்கள் காலத்திலேயே தர இயலாததை ஒப்புக் கொள்கின்றனர் என்றும் கூறுகிறார்.

தொல்காப்பியர் கூறும் உவம உருபுகளேயன்றி அவரால் கூறப்படாத சில வம உருபுகளும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. அமர், அவிர், ஆக, இகலிய, இயல், ஈர், உறைக்கும், ஏக்குறும், ஏதம், ஏர், ஓடு, ஓங்கு, ஓர்க்கும், சால, சினைஇய, சேர், சத்து, தேர், தோய், நவில், நாண, நாறு, மலி, மயங்கு, மாய், முரணிய , நாண, நாறு, மலி, மயங்கு, மாய், முரணிய, வாய்ந்த, வவ்வும் என்பன உள்ளிட்டவும் ஏனைய பிறவும் இவற்றின் திரிந்த வடிவங்களும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

சங்க இலக்கியக் காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த இந்த உவம உருபுகள் வரலாற்றில் ஒரு மிகப்பெரிய வளர்ச்சி நிலையைச் சுட்டுகின்றன. சங்க காலத்திற்கு முற்பட்டது என்று கருதப்படும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள உவம உருபுகளினின்று வேறுபட்ட தான 28 ற்கும் மேற்பட்ட உவம உருபுகள் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது உண்மையில் அதன் வளர்ச்சியையேச் சுட்டுகின்றது. என்னும் சங்க இலக்கியங்களில் தொல்காப்பியர் கூறியுள்ள வினை, பயன், மெய், உரு என்று வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்கு உரிய உவம உருபுகள் இன்னின்ன என செய்யப்பட்ட வகைமைப்பாடுகளைக் கொண்டு அமைக்கப்படவில்லை என்பது காணத்தக்க ஒன்றாகும்.

" விரவியும் வரூஉம் மரபின என்ப"

என்று தொல்காப்பியர் கூறியுள்ளமை அதற்கு முன்மொழி போன்றே அமைகின்றது. வினை, பயன், மெய், உரு என்று வகைப்டபடுத்தி,

வரையறுக்கப்பட்ட உவம உருபுகள் கூறப்பட்டிருப்பினும் புதுமை நோக்கில் பல உவம உருபுகள் பாடல்களில் கையாளப்பட்டு வந்திருக்கின்றன.

புலவர்களும் கவிஞர்களும் அவரவர்தம் கற்பனைத்திறனுக்கு ஏற்ப புதிய உவமச் சொற்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். உலக வழக்காயினும், செய்யுள் வழக்காயினும் உவமை அணி அதிகமாகக் கையாளப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

இந்த இரண்டாம் இயலில் சங்க இலக்கியம் தொடங்கி இடைக்கால இலக்கியங்கள் வரையிலான தமிழ் இலக்கிய நூல்களில் புலர்வர்களால் கையாளப்பட்ட உவம உருபுகள் இனம் காணப்பட்டு, சில சான்றுகளும் வரிசைபடுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியச் சான்றுகள்

எட்டுத்தொகை - நற்றிணை

"கட்டளை அன்ன இட்டு அசங்கு இழைத்து " - நற் பா..3

" குவளை அன்ன ஏந்து எழில் மழைக்கண்" - நற். பா. 6

"பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்ப " - நற். பா. 7

"கழை மாய் நீத்தம் காடு அலை ஆர்ப்ப" - நற். பா. 7

"கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும்" - நற். பா. 8

"பொன் நேர் மேனி" - நற். பா. 10

"பெய்யாது வைகிய கோதை போல" - நற். பா. 11

"பகழி அன்ன சேயரி மழைக்கண்" - நற். பா. 13

"நுணங்கு துகில் நடக்கம்போல" - நற். பா. 15

"பூவின் அன்ன நலம் புதிது உண்டு" - நற். பா. 15

"திரை தபு கடலின் இனிது கண் படுப்ப" - நற். பா. 18

"தடாஅ நிலை ஒரு கோட்டன்ன" - நற். பா. 18

"இரவு புறத் தன்ன பிணர் படு தடவுமுதற்
சுறவு கோட்டன்ன முள்ளிலைத் தாழை,
பெருங்களிற்று மருப்பு அன்ன அரும்பு முதிர்வு" - நற். பா. 19

"பூம்போல் உண்கண் பெயர்ப்ப நோக்கி" - நற். பா. 20

"உருக்குறு நறுநெய்பால் விதிர்த் தன்ன" - நற். பா. 21

"உடும்பு அடைந்தன்ன" - நற். பா. 24

"அவ்வளை வெரிநின் அரக்கு ஈர்த்தன்ன" - நற். பா. 25

"தெரிந்து ஊதா வண்டு ஓரன்ன" - நற். பா. 25

"கண்போல் பூத்தமை கண்டு"- நற். பா. 27

"அன்னை போல் இனிய கூறியும்
கள்வர் போலக் கொடியன்
பொன் என வேங்கை தாய ஓங்குமலை அடுக்கத்து" - நற். பா. 28

"இம்மென் இமிரும் ஏர்தரு தெருவின்
கடல் மரம் கவிழ்ந்தெனக் கலங்கி" - நற். பா. 30

"பலர் கொள் பலகை போல" - நற். பா. 30

எட்டுத்தொகை - குறுந்தொகை

"மாஎன மடலும் ஊர்ப; பூ எனக்
குவிமுகழ் எருக்கங் கண்ணியும் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப"- குறு. பா. 17

"சினைப் பசும்பாம்பின் சூள் முதிர்ப்பன்ன" - குறு. பா. 35

"செம்புலப் பெயல்நீர் போல" - குறு. பா. 40

"அணில் ஆடு முன்றிற் புலப்பில் போலப் புல்லென்று" - குறு. பா. 41

"ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன" - குறு. பா. 46

"இரும்புலிக் குருளை**யின்** தோன்றும்" - குறு. பா. 47

"அணிற் பல்அன்ன கொங்கு முதிர் முண்டகத்து
மணி கேழ் அன்ன" - குறு. பா. 49

"ஐயவி அன்ன சிறு வீ ஞாழல்" - குறு. பா. 50

"மீன் எறி தூண்டிலின் நிவக்கும்" - குறு. பா. 54

"நீர் உறை மகன்றிற் புணர்ச்சி போல" - குறு. பா. 57

"வெண்ணெய் உணங்கல் போல" - குறு. பா. 58

"ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல" - குறு. பா. 61

"ஐது தொடை மாண்ட கோதை போல" - குறு. பா. 62

"மடக்கண் குழவி அவம் வந்தன்ன" - குறு. பா. 64

"வம்ப மாரியைக் கார் **என** மதித்தே" - குறு. பா. 66

"பொலங் கல ஒரு காசு **ஏய்க்கும்"** - குறு. பா. 67

"பூழ்க் கால் அன்ன" - குறு. பா. 68

"பூ ஒத்த அலமரும் தகை ஏ ஒத்து" - குறு. பா. 72

"ஒன்று மொழிக் கோசர் போல" - குறு. பா. 73

"விட்ட குதிரை விசைப்பின் அன்ன" - குறு. பா. 74

"வேனில் ஆனேறு போல" - குறு. பா. 74

எட்டுத்தொகை - ஐங்குறுநூறு

"விண்டு அன்ன வெண்ணெல் போர்வில்" - ஐங். பா. 58

"கைவண் மத்தி கழாஅர் அன்ன" - ஐங். பா. 61

"இந்திர விழவில் பூவின் அன்ன" - ஐங். பா. 62

"தாமரை போல மலரும் ஊர!" - ஐங். பா. 68

"தைஇத்தண் கயம் போல" - ஐங். பா. 84

"பூப்போல் உண்கண் மரீஇய" - ஐங். பா. 101

"கண் போல் நெய்தல்" - ஐங். பா. 151

எட்டுத்தொகை - பதிற்றுப்பத்து

"நிலம் புடைப்பு அன்ன ஆர்ப்பொடு" - பதிற்று. பா. 44

"கண் போல் நெய்தல்" - பதிற்று. பா. 51

"வெறியுறு நுடக்கம்போல" - பதிற்று. பா. 51

"ஓவத்து அன்ன வினை புனை நல்லில்" - பதிற்று. பா. 61

"பாவை அன்ன நல்லோள்" - பதிற்று. பா. 61

"பொன்னின் அன்ன பூவிற் சிறியிலை" - பதிற்று. பா. 61

"நிலவின் அன்ன வெள்வேல் பாடினி" - பதிற்று. பா. 61

"விழவின் அன்ன நின் கலி மகிழானே" - பதிற்று. பா. 61

எட்டுத்தொகை - பரிபாடல்

"விதி கூட்டிய இய மென்நடை போல" - பரி. 10 ஆம் பாடல், வையை, அடி 25

"மதி உண்அரமகளென ஆம்பல் வாய் மடுப்ப"- பரி. 10 ஆம் பாடல், வையை, அடி 78

"களிறு போர் உற்ற களம்போல" - பரி. 10 ஆம் பாடல், வையை, அடி 110

"எண் மதி நிறை உவா இருள் மதிபோல" - பரி. 11 ஆம் பாடல், வையை, அடி"

எட்டுத்தொகை - கலித்தொகை

"இரு நிலம் தார் முற்றியதுபோல, தகை பூத்த வையை " - கலி. மருதக்கலி, பா. 67

"முகை வாய்த்த முலைபாயக் குழைந்த நின்தார்என்ன" - கலி. பா. 68

"மெல்லியான் செவிமுதல் மேல் வந்தான் காலை போல்"
- கலி. பா. 70

"ஆராத் துவலை அளித்தது போலும்" - கலி. பா. 71

"தேறல் உண்பவள் முகம் போல ". கலி. பா. 73

"வகை பெறச் செரீஇய வந்தகம் போல்" - கலி. பா. 79

"ஆல் அமர் செல்வன் அணி சால் பெரு விறல் போல " - கலி. பா. 81

"நீல நிரைப் போது உறு காற்கு உலைவன போல் சாலகத்து ஒல்கிய கண்ணர்" - கலி. பா. 83

"நீருள்அடைமறைஆய் இதழ்ப்போது போல்கொண்ட" - கலி. பா. 84

"மை பரு சென்னி மழ களிற்று ஓடை போல " - கலி. பா. 86

"பால் கொளல் இன்றி, பகல் போல்" - கலி. பா. 86.

"சோலை மலர் வேய்ந்த மான்பிணை அன்னார்" - கலி. பா. 93

"முத்து ஏர் முறுவலாய்" - கலி. பா. 93

"நீருள் நிழல் போல் நுடங்கிய மென் சாயல்" - கலி. பா. 94

"சோலை மலர் வேய்ந்த மான்பிணை அன்னார்" - கலி. பா. 93
"முத்து ஏர் முறுவலாய்" - கலி. பா. 93

"நீருள் நிழல் போல் நுடங்கிய மென் சாயல்" - கலி. பா. 94

எட்டுத்தொகை - அகநானூறு

"நெருப்பு எனச் சிவந்த உருப்பு அவிர் மண்டிலம்" - அக. பா. 31
"கண் என மலர்ந்த சுனையும்" - அக. பா. 38

"எரி மருள் பூஞ் சினை" - அக. பா. 41

"தாது இன் துவலை தளிர் வார்த்தன்ன" - அக. பா. 41

"உன் பதித்தன்ன வெருவரு செஞ்செவி" - அக. பா. 51

"தேரும் ஓவத்தன்ன கோவச் செந்நிலம்" - அக. பா. 54

"மரம் செல மிதித்த மாஅல் போல
புன்தலை மடப்பிடி உணீஇயர்" - அக. பா. 59

"நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி" - அக. பா. 84

"மூத்தோர் அன்ன வெண் தலைப் புணரி" - அக. பா. 90

வரை குயிற்றன்ன வான் தோய் நெடுநகர்" - அக .பா.93

"நுரை முகந்தன்ன மென் பூஞ்சேக்கை" - அக. பா. 93

"வாள் வரி வயமான் கோள் உகிர் அன்ன
செம்முகை அவிழ்ந்த முள் முதிர் முருக்கின்" - அக. பா. 99

"அவரைப் பொய் அதன் அன்ன" - அக. பா. 104

"எரி அகைந்தன்ன தாமரைப் பழனத்து" - அக. பா. 106

"பொரி அகைந்தன்ன பொங்கு பல் சிறுமீன்" - அக. பா. 106

"அரவு நுங்கு.மதியின், ஐயென மறையும்" - அக. பா. 114

"ஆறு செல் மாக்கள் அறுத்த பிரண்டை
ஏறு பெறு பாம்பின் பைந் துளி கடுப்ப" - அக. பா. 119

"நெடு வேள் மார்பின் ஆரம் போல" - அக. பா. 120

"சிறுவெள் இறவின் குப்பை அன்ன" - அக. பா. 152

"வயிரத் தன்ன வை ஏந்து மருப்பின்
வெதிர் வேர் அன்ன பரூஉமயிர்ப் பன்றி
--- --
பைம்புதல் நளிசினைக் குருகு இருந் தன்ன" - அக. பா. 178

"கல்லெனக் கொண்டல் வான்மழை பொழிந்த
வைகறைத் தண்பனி" - அக. பா. 178

"வெறி அயர் வியன்களம் கடுக்கும்" - அக. பா. 182

"கிளையரில் நாணற் கிழங்கு மணற் கின்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்"- அக. பா. 212

"அரவு எயிற்று அன்ன அரும்பு முதிர்வு குரவின்
தேன் இமிர் நறுஞ்சினைத் தென்றல்" - அக. பா. 237

"உலகு கிளர்ந் தன்ன உருகெழு வங்கம்" - அக. பா. 255

"பிடி மடிந்தன்ன குறும்பொறை மருங்கின்" - அக. பா. 269

"ஒண் செங்கழுநீர் அன்ன" - அக. பா. 269

"பொன் அவிர் சுணங்கொடு" - அக. பா. 279

"அணி நடை அன்ன" - அக. பா. 279

"நீலத்து அன்ன நிறம் கிளர் எருத்தின்" - அக. பா. 358

"மென் சீர் ஆடு தகை எழில் நலம் கடுப்ப" - அக. பா. 358

"உயர் மிசை எடுத்த ஆடுகொடி கடுப்ப" - அக. பா. 358

"தன் ஓரன்ன ஆயமும், மயில் இயல்
என் ஓரன்ன தாயரும்" - அக. பா. 385

எட்டுத்தொகை - புறநானூறு

"விண்பொரு புகழ் விறல் வஞ்சி" - புறம். பா. 11

"களிறு தன் கோட்டிடை வைத்த கவளம்போல" - புறம். பா. 101

"எண் நாள் திங்கள் அனைய
கொடுங்கரைத் தெள்நீர்ச் சிறுகுளம் கீள்வதுமாதோ" -புறம்.பா. 118

"யாழப் பந்தர்ப் புறம் கடுப்ப" - புறம். பா. 136

"குழல் இனைவது போல் அழுதனள்" - புறம். பா. 143

"களங்கனி அன்ன கருங்கோட்டு சீறியாழ்" - புறம். பா. 145

"மதி சேர் நாள்மீன் போல, நவின்ற
சிறு பொன் நன்கலம் சுற்ற இரீஇ" - புறம். பா. 160

"சிறு நுண் எறும்பின் சில் ஒழுக்கு ஏய்ப்ப,
சோறுடைத் கையர் வீறு வீறு இயங்கும்" - புறம். பா. 173

"யாணர்ப் பழுமரம் புள் இமிழ்ந்தன்ன" - புறம். பா. 173

"அஞ்சன உருவன் தந்து **நிறுத்தா**ங்கு" - புறம். பா. 174

"ஓர் ஊர் உண்மையான இழந்தோர் போல,
காணாது கழிந்த வைகல்" - புறம். பா. 176

"அதன் அறிந்தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல" - புறம். பா. 193

"வளி நடந்தன்ன வாச் செலல் இவுளியொடு" - புறம். பா. 198

"விசும்பல்,
கருவி வானம் போல
வரையாது சுரக்கும்" - புறம். பா. 204

"அணில் வரிக் கொடுங்காய் வாள் போழ்ந்திட்ட" - புறம். பா. 246

"ஓவத்து அன்ன இடனுடைவரைப்பில்" - புறம். பா. 251

"நிறம்பெயர்ந்துதில்லைஅன்னபுல்லென்சடையோடு"- புறம்.பா. 252

"கறங்கு வெள்ளருவி ஏற்றலின், நிறம் பெயர்ந்து
தில்லை அன்னபுல்லென் சடையோடு" - புறம். பா. 252

"குயில் வாய் அன்ன கூர்முகை அதிரல்" - புறம். பா. 269

"பழுமரம் உள்ளிய பறவை போல" - புறம். பா. 370

"செம்முகப் பெருங்கிளை இழைப் **பொலி**ந்து ஆங்கு" - புறம்.பா. 378

பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப்படை

"கோபத்து அன்ன தோயல் பூந்துகில்" -திருமுரு., அடி 15

"பூங்கேழ்த் தேய்வை, தேம் கமழ் மருது இணர் கடுப்ப" - திருமுரு., அடி 33,34

"கண் போல் மலர்ந்த காமரு சுனைமலர்" - திருமுரு., அடி 75

"கூற்றத் தன்ன மாற்றுஅரு மொய்ம்பின்,
கால் கிளர்ந் தன்ன வேழம்"- திருமுரு., அடி 81, 82

" வலம்புரி புரையும் வால்நரை முடியினர்" - திருமுரு., அடி 127

"புகை முகந்தன்ன மாசு இல் தூ உடை" - திருமுரு., அடி 140

"பொன்னுரை கடுக்குத் திதலையர்" - திருமுரு., அடி 145

"அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்" - திருமுரு., அடி 149

"முழவுறழ் தடக்கையி னியல் வேந்தி" - திருமுரு., அடி 215

இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
இரு மயிர் யாக்கை குடாஅடி உளியம்" - திருமுரு., அடி 312, 313

பொருநராற்றுப்படை

"குளப்பு வழி அன்ன கவடுபடு பத்தல்" - பொரு., அடி - 4

"ஐதுமயிர் ஒழுகிய தோற்றம் போல" - பொரு., அடி - 7

"அளை வாழ் அலவன் கண் கண்டன்ன" - பொரு., அடி - 9

"பாம்பு அணைந்தன்ன ஓங்கு இரு மருப்பின்" - பொரு., அடி - 13

"ஆய்தினை யரிசி அவையல் அன்ன" - பொரு., அடி - 16

"அழல் போல் கூந்தல் பிறை போல் திரு நுதல்" - பொரு., அடி - 25

"வண்டு இருப்பு அன்ன பல் காழ் அல்குல்" - பொரு., அடி - 39

"மரல் பழுத்தன்ன மறுகுநீர் மொக்குள்" - பொரு., அடி - 45

" அரவு உரி அன்ன அறுவை நல்கி" - பொரு., அடி - 83

"மழை என மருளும் மகிழ் மாடத்து" - பொரு., அடி - 84

"ஏரி அகைத்தன ஏடுஇல் தாமரை" - பொரு., அடி - 159

சிறுபாணாற்றுப்படை

"மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல் வரூஉம் ஆரம் போலச்
செம்புனல் உழந்த சேய் வரற் கான் யாறு" - சிறுபாண்., அடி - 1- 3

"ஆசுஇல் அங்கை அரக்குத் தோய்ந்தன்ன சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை" - சிறுபாண்., அடி - 74,75

"ஓங்குநிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்" - சிறுபாண்., அடி - 153-155

"அணிமுலைத் துயல்வருஊம் ஆரம் போல,
செம்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்று" - சிறுபாண்., அடி - 283

"மதிசேர் அரவின் மானத் தோன்றும்
மருதம் சான்ற மருதத் தண்பணை" - சிறுபாண்., அடி - 185,186

"பேய்மகள் நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல,
பிணன் உகைத்துச் சிவந்த பேர்உகிர்" - சிறுபாண்., அடி - 197-199

"கடவுள் மால்வரை கண் விடுத்தன்ன" - சிறுபாண்., அடி - 205

"பல்மீன் நடுவண் பால்மதி போல,
இன்நகை ஆயமொடு இருந்தோர்" - சிறுபாண்., அடி - 219,220

"பைங்கண் ஊக்கம் பாம்பு பிடித்தன்ன" - சிறுபாண்., அடி - 221

பெரும்பாணாற்றுப்படை

"குறுந்தொடி ஏய்க்குமெலிந்துவீங்கு திவவின்"-பெரும்பாண்.,அடி 13

"பழுமரம் தேரும் பறவை போல" - பெரும்பாண்., அடி 20-22

மதுரைக் காஞ்சி

"பழந்தேர் வாழ்க்கைப் பறவை போல "
- மதுரைக் காஞ்சி, அடி 580

மலைபடுகடாம்

"விண்ணிதிர் இமிழிசை கடுப்ப"- மலைபடு.,-அடி 2

திருக்குறள்

"இறந்தாரை எண்ணிக்கொண் .டற்று"- குறள் 22

"கொக்கொக்கக் கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து" - குறள் 490

"வினை பகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்

தீயெச்சம் போலத் தெறும்" - 67

"குன்றின் அனையாருங் குன்றுவர்" - குறள் 963

நாலடியார்

"கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியின் கரும்புதின் றற்றே - நுனிநீக்கித்
தூரில் தின்றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு" - நாலடி 138

பழமொழி நானூறு

" நற்கு அறிவு இல்லாரை நாட்டவும் மாட்டாதே
சொற்குறி கொண்டு துடிப்பண் உறுத்துவதுபோல "
- பழமொழி நானூறு, அறிவுடைமை, பா. 2

ஐம்பெரும் காப்பியங்கள் - சிலப்பதிகாரம்

"இடிக்கலப்பு அன்ன ஈர் அயிர் மருங்கில்"

- சிலம்பு, கடலாடு காதை அடி 146

"மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பு எய்தி"

- சிலம்பு, கானல்வரி அடி 2

"பயிர் வண்டின் கிளை போலப் பல்நரம்பின் மிசைப்படர"

- சிலம்பு, கானல்வரி 11

"இடிஉண்ட மஞ்ஞை போல் ஏங்கி அழுதாளுக்கு"

- சிலம்பு, கனாத்திறம் உரைத்த காதை அடி 23

"கதிரவனும் மாலை மதியமும் போல் வாழியரோ"

- சிலம்பு நாடு காண்கதை, அடி 22

"கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப் படுங்கதிர் அமையும் பார்த்திருந்
தோர்க்கு"

- சிலம்பு, புறச்சேரி இறுத்த காதை, அடி 15

"கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றுஇவ்
அருந்திறல் வேனிற்கு அலர்களைத் துடனே
வருந்தினை போலும் நீ மாதவி "

- சிலம்பு, புறஞ்சேரி இறுத்த காதை, அடி 48-51

"அருமணி இழந்த நாகம் போன்றதும்"
- சிலம்பு, புறஞ்சேரி இறுத்த காதை, அடி 58

"இன்னுயிர் இழந்த யாக்கை என்னத் துன்னிய
சுற்றம் துயர்க் கடல் விழ்ந்ததும்"
- சிலம்பு, புறஞ்சேரி இறுத்த காதை, அடி 59-60

"அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெருபே துற்றதும்"
- சிலம்பு, புறஞ்சேரி இறுத்த காதை 65 - 66

"கண்மணி அனையாருக்குக் காட்டுக"
- சிலம்பு, புறஞ்சேரி இறுத்த காதை, அடி 75

"வையை யென்ற பொய்யாக் குலக்கொடி"
- சிலம்பு, புறஞ்சேரி இறுத்த காதை, அடி 170

மணிமேகலை

"பொன் நேர் அணையாய்"
- மணி., ரலர் உரைத்த காதை, அடி 16

"குணதிசைத் தோன்றி காரிருள் சீத்தூக்
குடதிசைச் சென்ற ஞாயிறு போல"

- மணி., பாத்திர மரபு கூறிய காதை, அடி 100

"மயங்கிக்கால் எடுத்த வங்கம் போல"

- மணி., பளிக்கறை புக்க காதை, அடி 34

"நீலமால்வரை நிலனொடு படந்தெடை"

- மணி., பளிக்கறை புக்க காதை, அடி 43

"உருவு கொண்ட மின்னே போல்"

- மணி., சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை, அடி 9

"பொற்கொடி அன்னாய்"

- மணி, பாத்திரம் பெற்ற காதை, அடி 11

"வெள்ளை மகன் போல் விலா இற நக்கு ஈங்கு"

- மணி, பாத்திர மரபு கூறிய காதை, அடி 36

"எண்கு தன் பிணவோடு இருந்தது போல"

- மணி, ஆதிரை பிச்சையிட்ட காதை அடி 68

"புனையா ஓவியம் போல"

- மணி, ஆதிரை பிச்சையிட்ட காதை அடி ஒன் 131

அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்

திறந்து வழிப்படூஉம் செய்கை போல'

- மணி, உலகறவி புக்க காதை, அடி 4

"தீப்பிறப் புகழ்ந்தோர் செய்வினை பயத்தால் யாப்பிடை
நற்பிறப் பெய்தினர் போல"
- மணி.,உதயகுமரனைக் காஞ்சனன் வாளாலெறிந்த காதை,
அடி 3,4

"இறலின் உணங்கல் போன்று வேறாயின"
- மணி, உதயகுமரனைக் காஞ்சனன் வாளாலெறிந்த காதை,அடி 46

"கடம்போல் அறிந்தத் தறிவோ?
ஆகாசம் போல் அறிந்த தறிவோ?"
- மணி.தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதை
- மணி. அடி 221 - 222

"பசிப்பிணி என்னும் பாவியது தீர்த்தோர்
- மணி.தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதை அடி 80-81

சீவக சிந்தாமணி

"அத்தம் அனைய களிற்று"
- சீவக சிந்., கடவுள் வாழ்த்து, பா.18
(அத்தகிரி என்னும் மலை போன்ற யானைப் படை)

"பொலங்கொல் கொன்றையினான் சடைபோல் மின்னி" - சீவக சிந்.,
நாமகள் இலம்பகம் பா. 32

"வெள்ளி வெண்கோல் நிரைத்தன போற்

கொழுந்தாரைகள்" - சீவக சிந்., நாமகள் இலம்பகம் பா. 33

"கண்ணெனக் குவளையும் கட்டல் ஒம்பினார் வண்ணவாள் முகமென
மரையினுள் புகார்"
- சீவக சிந்., நாமகள் இலம்பகம் பா. 51

"வயிரவரை கண்விழிப்ப போன்று மழை உகளும் வயிரமணி தாழ்கதவு
வாயில் முகமாக"
- சீவக சிந்., நாமகள் இலம்பகம் பா. 105

"சேர்க்கை கோழி போல் குறைந்து நெஞ்சின் அறம்"
- சீவக சிந்., கோவிந்தையார் இலம்பகம் பா. 449

"கோள்முகப் புலியோடு ஒப்பான்"
- சீவக சிந்., கோவிந்தையார் இலம்பகம் பா. 470

"ஆயிரச் செங்கணான்தன்
சேயுயர் உலகம் எய்தி அன்னதோர் செல்வமுற்றார்"
- சீவக சிந்., கோவிந்தையார் இலம்பகம் பா. 473

"முதிர் பெயர் மூரி வான முழங்கிவாய் விட்ட தொப்ப"
- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 543

"அதிர்குரல் முரசம் நாண அமிர்துபெய் மாரி ஏய்ப்பு"
- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 543

"முகில்தலை மாடம் மதியம் அன்ன முழு மணி மாடத்து இட்ட"

- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 601

"கொழுங்கனி கோட்டிடைத் தூங்குவ
உண்டான் அமிழ்தொத்து உடம்பு குளிர்ந்தான்"

- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 525

"பொங்கி ஆயிரந் தாமரை பூத்தபோல்
செங்கண் ஆயிரம் சேர்ந்தவன் பொன்னகர்"
- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 528

"விண்ணகம் வணங்க வெண்கோட்டு
இளம்பிறை முளைத்த தேபோல்
பண்ணகத்து இனிய சொல்லாள்
பாவையைப் பயன்ற ஞான்றே"
- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 538

"அமிர்துபெய் மாரி ஏய்ப்ப"
- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 543

"காற்கு ஒசி கொம்பு போல"
- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 675

"மீனெறி தூண்டில் போன்ற வெஞ்சிலை நாண்றள் அற்ற
தேனெறி குன்றம் ஒத்த திண்கச்சை துணிந்த வேழம்"
- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 800

"கார்கெழு கடல்எனக் கலந்த வல்லதூஉம் பார்க்கெழு பழுமரப் பறவை ஒத்ததே"
- சீவக சிந்., காந்தருவதத்தையார் இலம்பகம் பா. 828

கடலெனக் காற்றெனக் கடுங்கண் கூற்றென
உடல்சின உருமென ஊழித் தோன்றியது"

- சீவக சிந்., குணமாலையார் இலம்பகம் பா. 973

"கடம்பு சூடிய கன்னி மாலை போல்

தொடந்து கைவிடாத் தோழிமார்"

- சீவக சிந்., குணமாலையார் இலம்பகம் பா. 990

" கூற்றென முழங்கிக்

காற்றென உரறி....."

- சீவக சிந்., குணமாலையார் இலம்பகம் பா. 981

" மழை மொக்குள் அன்ன வருமென் முலை மாதர்"

- சீவக சிந்., குணமாலையார் இலம்பகம் பா. 1064

" தாயிலாக் குழுவி போல....

வேயுலாந் தோளினார்......"

- சீவக சிந்., கனகமாலையார் இலம்பகம் பா. 1581

" மணியெழு அனைய தோளும் வரையென அகன்ற மார்பும்

தனிவரும் கயத்துப்பூத்த தாமரை அனைய கண்ணும்

பனிவரும் பரிதி அன்ன முகமமென்று ...."

- சீவக சிந்., கனகமாலையார் இலம்பகம் பா. 1582

" கடல்போல் அகன்றஎன் உண்ணீர்மையெல்லாம் ...."

- சீவக சிந்., கனகமாலையார் இலம்பகம் பா. 1968

" பள்ளிமேல் எழுதப்பட்ட பாவை போல் ஆயினாளே"
- சீவக சிந்., கனகமாலையார் இலம்பகம் பா. 1990

" காந்தண் முகிழ்விரல் ....."
- சீவக சிந்., கனகமாலையார் இலம்பகம் பா. 1992

வளையாபதி

"மதிகள் போல மறுவிலிர் தோன்றுவீர்"- வளை. பா. 23

"பீடுறும் மழை பெய்யெனப் பெய்தலும்"- வளை. பா. 38

" அந்தகன் அந்தகற்கு ஆறு சொலல் ஒக்கும்" - வளை. பா. 41

"உய்த்து ஒன்றி ஏந்தந்து உழஉழுது அகற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குறல் என் ஒக்கும்"- வளை. பா. 46

"தெண்ணீர் பரந்து திசைதொறும்
போய்க் கொட்ட
எண்ணெய் கொண்டு ஈட்டற்கு
இவறுதல் என் ஒக்கும்"- வளை. பா. 49

"நாள்தொறும் தோயும் நகை மதி ஒப்ப"- வளை. பா. 56

"வாள்நெடுங் கண்ணவர்
கொம்பிடை வாழும் குரங்கும் புரைப"- வளை. பா. 61

"முருக்கு அலர் போல் சிவந்து "- வளை. பா. 62

"வரிச்சிறை வண்டின் வகையும் புரைப"- வளை. பா. 62

"அந்தகன் அந்தகற்கு ஆறு சொலல் ஒக்கும்"- வளை. பா. 69

குண்டலகேசி

"வாயுவினை நோக்கிஉள மாண்டவய நாவாய்
ஆயுவினை நோக்கிஉள வாழ்க்கை அதுவே போல்"
- குண்ட. பா. 3

கம்பராமாயணம்

"குரப்பணை நிரப்பு மள்ளர்
குவிப்புறக் கரைகள் தோறும்
பரப்பிய பொன்னி யன்ன " - கம்ப. ராமா., பாலகாண்டம், பா. 572

" மட்கலத் திகிரி போல"
- கம்ப. ராமா., பாலகாண்டம், பா. 575
"பாலுறு பிரையெனப் பரந்தது எங்குமே"
- கம்ப. ராமா., பாலகாண்டம், பா. 603

"தயிர் உடைக்கும் மத்தென்ன, உலகைநலி
சம்பரனைத் தடித்த அந்நாள்"

- கம்ப. ராமா., ஆரண்யகாண்டம், சடாயு காண் படலம், பா. 13

பெரிய புராணம்

"மலரும் வெண்மலர் போல்வது அம்மால் வரை "
- பெ. புரா., திருமலைச் சிறப்பு, பா. 13

" அங்கண் ஓர்ஒளி ஆயிர ஞாயிறு
பொங்கு பேர்ஒளி போன்றுமுன் தோன்றிட "
- பெ. புரா., திருமலைச் சிறப்பு, பா. 51

"கரும்பு அல்ல நெல் என்னக்
கமுகு அல்ல கரும்பு என்னச்
கரும்பு அல்ல குடை நீலத்
....
அரும்பு அல்ல முலை என்ன
அமுது அல்ல மொழி என்ன
...."
- பெ. புரா., திருநாட்டுச் சிறப்பு, பா. 65

"கயல் பாய்பைந் தடம் நந்து (நந்த) ஊன்"
- பெ. புரா., திருநாட்டுச் சிறப்பு, பா. 66

"குளம் எல்லாம் கடல் அன்ன"
- பெ. புரா., திருநாட்டுச் சிறப்பு, பா. 67

"பக்தியின் பால் முதிர்தலை வணங்கி மற்றை

வித்தகர் தன்மை போலவிளைந்தன சாலி எல்லாம்"

- பெ. புரா., திருநாட்டுச் சிறப்பு, பா. 72

"மறையோன் தன்பின் திருமுகக் காந்தஞ் சேர்ந்த

வல்லிரும் பணையு மாபோல் வள்ளலுங் கடிது சென்றான்"

- பெ.புரா., தடுத்தாட்கொண்ட புராணம், பா. 196

"கதிர்மணி பிறந்த தென்ன உருத்திர கணிகை மாராம்"

- பெ.புரா., தடுத்தாட்கொண்ட புராணம், பா. 278

"மானிளம் பிணையோ தெய்வ வளிரின முகையோ வாசத்

தானிளம் பருவம் கற்கும் தனி இளத் தனுவோ

- பெ.புரா., தடுத்தாட்கொண்ட புராணம், பா. 281

"கொங்கை கோங்கரும்பை வீழ்ப்ப"

- பெ.புரா., தடுத்தாட்கொண்ட புராணம், பா. 282

"அணிசிலம் படிகள் பார்வெண் றடிப்படுத் தனம் என்றார்ப்ப"

- பெ.புரா., தடுத்தாட்கொண்ட புராணம், பா. 284

"விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக் கண்டார்"

- பெ.புரா., தடுத்தாட்கொண்ட புராணம், பா. 285

"மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்து"

- பெ.புரா., மெய்ப்பொருள் நாயனார் புராணம், பா. 473

" துங்கமால் வரைபோல் தோன்றித் துண்ணென அணைந்த தன்றே"

- பெ.புரா., எறிபத்த நாயனார் புராணம், பா. 562

"விசைகொண்ட களிறு சண்டக
கால்கொண்டு போவார் போலக் கடிது கொண்ட கலப்போக"
- பெ.புரா., எறிபத்த நாயனார் புராணம், பா. 564

"கையினைத் துணிந்தபோது கடலெனக் கதறி வீழ்ந்து
மைவரை அனைய வேழம்"
- பெ.புரா., எறிபத்த நாயனார் புராணம், பா. 575

"இனத்திடைப் பிரிந்த செங்கண் ஏறென வெருக் கொண்டெய்தி"
- பெ.புரா., கண்ணப்ப நாயனார் புராணம், பா. 820

"குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்தும் ஆடி"
- பெ.புரா., கண்ணப்ப நாயனார் புராணம், பா. 823

"கருகு மையிருளின் கணம் கட்டுவிட்டு
உருகுகின்றது போன்ற துலகெலாம்"
- பெ. புரா., இளையான்குடி மாற நாயனார் புராணம், பா. 15

தேம்பாவணி

"பயனினால் மறைநூல் ஒக்கும்
பகலினை மணியால் ஒக்கும்,
வியனினால் உலகம் ஒக்கும்
வேலியால் கன்னி ஒக்கும்,
முயலினால் அலையை ஒக்கும்

முனிமுனி ஒன்னார்க்கும் ஒக்கும்,
நயலினால் உயர் விடொக்கும்
நகரினை ஒக்கும் வீடே "- தேம்பாவணி 286

சிற்றிலக்கியம் - குறவஞ்சி

"முழங்கு திரைப் புனலருவி கழங்கென முத்தாடும்
முற்றம் எங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்"
- குற்றாலக் குறவஞ்சி, பாடல் எண்:2

தனிப்பாடல்கள்

"உவர்கடல் அன்ன செல்வரும் உளரே,
கிணற்றூற்று அன்ன நீயுமாரு ளையே"

"நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்"
- சத்திமுத்தப் புலவர், தனிப்பாடல்

இக்கால இலக்கியம்

"எட்டி போல் வாழ்கின்றீர் கொட்டிபோல் திளைத்தீர்"
- இராமலிங்க அடிகள்

"கார்த்திகை தீபமெனக் காடெல்லாம் பூத்திருக்கும்"

- சுரதா, காடு

" என் தாயார் போல கருத்தான என் மக"

- இளம்பிறை கவிதை, 'நீ எழுத மறுக்கும் எனதழகு' ப. 16

முடிவுரை

பொதுவாக நடைமுறையில் நாம் பெரும்பான்மையாக பயன்படுத்தக்கூடிய 'போல' என்ற உவமை உருபு மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுபோன்றே 'அன்ன' என்பதுவும் அதற்கடுத்த நிலையில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உறழ, ஏய்ப்ப, ஒப்ப, கடுப்ப, மான, புரைய போன்றன அருகியும் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் வெவ்வேறு காலகட்டத்தில் வாழ்ந்த புலவர்களால் எழுதப்பட்ட பாடல்களாக விளங்குவதால் உவம உருபுகளின் பயன்பாடும் அதுபோன்று வேறுபட்டுக் காணப்படுகின்றது.

SHRIMATHI DEVKUNVAR NANALAL BHATT
VAISHNAV COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)
(Affiliated to the University of Madras and Accredited with 'A+' Grade by NAAC)
Chromepet, Chennai - 600 044.

SEED MONEY GRANT - UTILIZATION CERTIFICATE

Name of the investigator & Designation	: Dr. S. Lakshmi
Name of the Department	: Tamil
Title of the proposed work	: Tholkappiya uvamaiyiyalum AdanValarchi PadiNilaigalum
Duration of the Research Work	: One year
Year of Project	: December 2019-December 2020

This is to certify that the sum of **Rs. 65,000/-** has been sanctioned by the Management for carrying out the above mentioned research project under Seed Money Grant, out of which **Rs. 5,000**/- has been utilized for the purpose for which it was sanctioned.

Date: 31/03/2021

Project Id: **19TPRE001**

S. Lakshmi

Investigator

S.D.N.B. VAISHNAV COLLEGE FOR WOMEN Autonomous Chromepet, Chennai-44.

R. Geetha

Principal

To be filled by the Research Committee

Certified that I have satisfied myself that the conditions on which the grand-in-aid was sanctioned during the academic year have been duly fulfilled and we have done auditing of the bills submitted to ensure that the money was actually utilized for the purpose for which it was sanctioned as per data is furnished above.

Chief Financial Officer
Shrimathi Devkunvar Nanalal Bhatt
Vaishnav College for Women (Autonomous)
Chromepet, Chennai-600 044.

Research Dean
Dean - Research
Shrimathi Devkunvar Nanalal Bhatt
Vaishnav College for Women (Autonomous)
Chromepet, Chennai-600 044.